அக்டோபர்: 2023 ● மாத இதழ்

ரூ.50

தொழில் உலகம் பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

# தமிழக விவசாயி உலகம்

மலர் - 25 இதழ் - 9

## இயற்கை முறை கொய்யா சாகுபடியில் அசத்தும் பெண்மணி!





## பசுமைக்குடில் தொழில்நுட்பத்தில் வெற்றிகரமான குடைமிளகாய் சாகுபடி!

## இரத்த சர்க்கரை அளவை குறைக்கும் ‘நெல்லிக்கனி’



## மானியத்துடன் விவசாயிகளுக்கு ட்ரோன் வழங்கும் திட்டம்!

தமிழக அரசு அறிவிப்பு





தமிழக
# விவசாயி
உலகம்

மாத இதழ்

மலர் 25 இதழ் 9

அக்டோபர்: 1.15.2023 விலை ரூ.50/-

ஆசிரியர் பதிப்பாளர்

**ஆர்.விஜயகுமார்**

உதவி ஆசிரியர்

**வி.கனிமொழி**

**ஆண்டு சந்தா விவரம்**

ஓராண்டு ரூ. 960

இரண்டாண்டு ரூ. 1800

மூன்றாண்டு ரூ. 2400

**அலுவலக முகவரி:**

**தொழில் உலகம் பப்ளிகேஷன்ஸ்**

13A, காமராசர் தெரு,

விநாயகபுரம், சென்னை 600 099.



**தொடர்புக்கு**

9444039232

இமெயில்: publisher.ttu@gmail.com


**எச்சரிக்கை:**
இந்த இதழில் இடம்பெற்றுள்ள செய்திகள் அனைத்தும் முடிந்தவரை சரிபார்த்த பின்னரே வெளியிட்டிருக்கிறோம். இருந்தாலும் வாசகர்கள் வியாபாரத் தொடர்பு கொள்ளும் முன் பலமுறை சரிபார்த்து மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


தொழில் உலகம் பப்ளிகேஷன்ஸ் சார்பில் சென்னை 2, J. M. Process அச்சகத்தில் அச்சிட்டு, 13A, காமராசர் தெரு, விநாயகபுரம், சென்னை 600 099 லிருந்து வெளியிடுபவர், ஆசிரியர் ஆர். விஜயகுமார்


உங்களது தொழில் உலகம் இதழ் இனி இணையத்திலும் படிக்கலாம்: **www.ttupublications.com**

# உள்ளே...


| | |
|---|---|
| நிலக்கடலை மேலாண்மை! | 4 |
| பசுமைக்குடில் குடைமிளகாய் சாகுபடி! | 5 |
| முதல் கடற்பாசி பூங்கா! | 8 |
| வருமானம் தரும் வேப்ப மரங்கள்! | 9 |
| கொய்யா சாகுபடியில் அசத்தும் பெண்மணி! | 11 |
| காற்று - விழிப்புணர்வு! | 15 |
| 100 நாள் வேலை - அலசல்! | 16 |
| பழமர சாகுபடி! | 19 |
| ட்ரோன் வழங்கும் திட்டம் - அரசு அறிவிப்பு! | 20 |
| சுற்றுச்சூழல் எச்சரிக்கை! | 22 |
| பாரம்பரிய நெல் - 'சின்னார் அரிசி'! | 23 |
| கறவை பராமரிப்பு! | 25 |
| கால்நடைக்கல்வி! | 26 |
| பழங்களின் மருத்துவம் - 'நெல்லிக்கனி'! | 28 |
| மண் ஆய்வு! | 31 |
| மலர்களின் மருத்துவம் - 'சரக்கொன்றைப் பூ'! | 32 |
| கைகொடுக்கும் ஸ்டார்ட் அப் - ஒரு பார்வை! | 35 |
| மண் வளம்! | 36 |
| உளுந்து சாகுபடி தொழில்நுட்பம்! | 38 |
| பண்ணைக்கருவி! | 40 |
| எருமையினங்கள் - 'கோஜ்ரி'! | 41 |
| பருவமும் பட்டமும் - புரட்டாசி! | 43 |
| மரவள்ளி கிழங்கு சாகுபடி! | 45 |
| சிறுகதை! | 48 |

பயறு வகை சாகுபடி:

# ஒருங்கிணைந்த உளுந்து சாகுபடி தொழில்நுட்பங்கள்!

**உளுந்து இந்திய முழுவதும் பயிரிடப்படும் மிக முக்கியமான பயிறு வகை பயிராகும். தமிழகத்திலும் இது அனைத்து பகுதிகளிலும் பரவலாக பயிரிடப்படுகிறது. உளுந்தானது உடைத்தோ அல்லது உடைகாமலோ பல்வேறு விதமான உணவாக பயன்படுத்தப்படுகிறது.**

நம் பகுதியை பொறுத்தவரை அரிசிமாவுடன் உளுந்தமாவை கலந்து புளிக்க வைத்து தோசை, இட்லி போன்ற உணவு வகைகள் தயாரிக்க பயன்படுகிறது. உளுந்தில் அதிக மாவுச் சத்தும் (60%) அதிக அளவு புரதச்சத்தும் (21%) உள்ளது.

மேலும் இந்த பயிரானது ஆழமான வேர் அமைப்பை கொண்டிருப்பதால் மண்துளை களை இறுக்கமாக பிடித்து மண் அரிப்பை தடுக்க உதவுகிறது. இது நல்ல பசுந்தாள் உரப்ப யிராகவும் பயன்படுகிறது.

மேலும் மற்ற பயிறு வகை பயிர்களை விட 5 மடங்கு அதிகமான பாஸ்பாரிக் அமிலத்தை கொண்டுள்ளது. தமிழகத்தை பொறுத்த வரை மானாவாரியில் அதிக அளவு சாகுபடி செய்யப் படுகிறது. பழைய இரகங்களை பயன்படுத்துவ தாலும், சரியான பயிர் மேலாண்மை உத்திகளை கடை பிடிக்காததாலும் விவசாயிகள் குறை வான மகசூலே எடுக்கின்றனர்.

எனவே ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை உத்தியை கடைபிடித்து எவ்வாறு அதிக மகசூல் பெறலாம் என்பதை குறித்து இந்த கட்டுரையில் காண்போம்.

### நிலம் தயாரித்தல்:

நல்ல மணற்பாங்கான பூமியிலும் கரிசல் நிலத்திலும் உளுந்து நன்கு செழித்து வளரும். நல்ல வடிகால் வசதியுள்ள குறுமண் உகந்த தாகும். மண்ணின் அமில கார தன்மை 5.57.0 வரை இருக்கலாம். உவர் நிலங்கள் உளுந்து சாகுபடிக்கு உகந்தது இல்லை.

நிலத்தை மூன்று முதல் நான்கு முறை சட்டிக்கலப்பை கொண்டு நல்ல உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு



5 டன் மக்கிய தொழு உரத்தை உயிரி உரங்களு டன் கலந்து இட வேண்டும்.

### அதிக மகசூல் தரக்கூடிய இரகங்கள்

விபிஎன் 8

**வயது** : 65 முதல் 70 நாட்கள்

**மகசூல்:** 350 கிலோ/ஏக்கர்

### சிறப்பம்சம்:

மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு தன்மை உடையது மற்றும் ஒரே நேரத்தில் அறுவடைக்கு தயாராகும்.

### விதைப்பும் விதை நேர்த்தியும்:

ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதை போதுமான தாகும். விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக ஒரு கிலோ விதைக்கு கார்பென்டசிம் 2 கிராம் அல்லது ட்ரைக்கோ டெர்மா விரிடி

4 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். இதனால் பயிர் வளர்ச்சியில் ஆரம்ப நிலைகளில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

**விதைப்பு:** விதைகளை 30X10 செ.மீ என்ற அளவில் விதைக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை:**

- விதைப்பதற்கு முன் அடியுரமாக ஒரு ஏக்கருக்கு 5 கிலோ தழைச்சத்து 10 கிலோ மணிச்சத்து 5 கிலோ சாம்பல்சத்து மற்றும் 5 கிலோ கந்தக சத்தை இட வேண்டும். 25 நாட் கள் கழித்து 5கிலோ தழைச்சத்து 10 கிலோ மணிச்சத்து 5 கிலோ சாம்பல்சத்தை இட வேண்டும்.
- உளுந்து மகசூலை அதிகரிக்க இலைவழியாக 1 சதவீத யூரியாவை விதைத்த 30 மற்றும் 45 வது நாட்களில் தெளிக்க வேண்டும்.
- வறட்சி அல்லது மழை பெய்யாத காலங் களில் 2 சதவீதம் (20 கிராம் ஃ 10 லிட்டர் தண்ணீருக்கு) பொட்டாசியம் குளோ ரைடை இலைவழியாக தெளிப்பதனால் அதிக மகசூல் பெறலாம்.
- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள பயிறு அதிசயம் 2 கிலோவை 200 லிட்டர் தண்ணீ ரில் கலந்து பூக்கும் தருணத்தில் இலைவழி யாக தெளிப்பதனால் 20 விழுக்காடு கூடு தல் மகசூல் பெற முடியும்.

**களை மேலாண்மை:**

- மலை பொழியும் நேரமாக இருந்தால் களை முளைப்பதற்கு முன் களைக்கொல் லியான பெண்டிமெத்திலீனை 1 லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். சூழ்நிலை அவ்வாறு இல் லையென்றால் விதைத்த 15 நாளில் கைக்களை யும் 30 வது நாளில் ஒரு கைக்களையும் எடுக்க வேண்டும்.

**உளுந்தில் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள்:**

சாம்பல் நோய்,மஞ்சள் சோகை நோய் மற்றும் வேர் அழுகல் நோய் போன்றவை உளுந்தை தாக்க கூடிய நோய்களாகும். இவற்றை



கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5 விழுக்காடு அல்லது வேப்ப எண்ணெய் (3 மி லி ஃ 100 மி லி தண்ணீர் ) கலந்து 2 முறை 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

இல்லையென்றால் ஒரு ஏக்கருக்கு 100 கிராம் கார்பென்டாசிம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மஞ் சள் தேமல் நோயை கட்டுப் படுத்த சாறு உறிஞ்சும் பூச்சை கட்டுப்படுத்தும் மருந்தை தெளிக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள்:**

- இனக்கவர்ச்சி பொறி ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைத்து பூச்சி நடமாட் டத்தை கட்டுப்படுத்த வேண்டும்.
- ஏக்கருக்கு 20 என்ற எண்ணிக்கையில் "T" வடிவ பறவை தாங்கி குச்சிகளை வைக்க வேண்டும். இதன் மூலம் பறவைகள் சிறிய புழுக்களை உணவாக உட்கொண்டு புழுக் களை கட்டுப்படுத்தும்.
- சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப் படுத்த மெத்தில்தேமாட்டான் மருந்தை 400 லிட்ட ருக்கு 300 மி.லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது வேப்பங் கொட்டைச்சாறு 5 சதவீதம் அல்லது வேப்ப எண்ணெய் 2 சதவீதம் 10 நாள் இடைவெளி யில் 2 முறை தெளிக்க வேண்டும்.

**- திரு.பொ.மகேஸ்வரன் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ)**

**திரு எம் அருண்ராஜ், திரு சீ சபரிநாதன்,**

**தொழில் நுட்ப வல்லுநர்கள்**

**செண்டெகட் வேளாண் அறிவியல் மையம்**

**தேனி மாவட்டம் 9677661410**